1. இம்மாதவ கீதத்தை, மாசின்றி அமைத்துத்தர, மாலின் மருமகனான, மஹா கணபதியை மனமாற வேண்டுதல்.

இராகம் : கம்பீரநாட — தாளம் : ஆதி

ஆ : ஸ க ம ப நி ஸ் — 36-வது மேளத்தின்

அ : ஸ் நி ப ம க ஸ — ஜன்யம்

**பல்லவி**

கருணை செய்வாய் கஜமுகனே - எனக்
கருள் புரிவாய் மால் மருகனே (கருணை)

**அனுபல்லவி**

கருத்தில் வந்தமருவாய் சக்தி வினாயகனே
கங்கா ஜடாதரனின் மூத்த மகனே (கருணை)

**சரணம்**

கண்ணன் ராதையின் கதையினைச் சொல்லிடவே
கருத்தினைத் தருவாய் கணபதியே
எண்ணும்படி நான் எழுதிடவே - நீ
எப்பிழையும் வராமல் காத்தருள் (கருணை)

**பல்லவி**

| $I_4$ | O | O |
|---|---|---|
| ; க மா பப ம ம க ப ம கா ;<br>க ரு ணை செய் வா . . . ய்<br>நீ நி ஸா க மா பா ; ப நி மா<br>கு அ ரு ள் பு ரி வா . ய் மா<br>கா -<br>(கருணை) | ; ஸ நீ ஸ கா<br>க ஜ மு க<br>பா , ம பா நீ<br>ல் மருக | ஸா ; ; ஸ ஸ<br>னே எ ன க்<br>ஸ்ா , நி பம கஸ<br>னே . . . . . |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; கமா பா நிஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா<br>கரு த்தில் வந்த ம ரு வாய்<br>; நிஸ் க்ா , க்கா , ம்கா ஸ்ா<br>கங் கா ஜடா தரனின்<br>.<br>கா -<br>(கருணை) | ; ஸ்ா , க் ஸ்ா<br>சக் தி வி<br>; நீஸ் நி பா<br>மூ . . த்த | நீ , ஸ் க் ஸ் நீ<br>னா ய க . னே<br>மக பம கம கஸ<br>ம . . . க . னே |

**சரணம்**

| $I_4$ | O | O |
|---|---|---|
| ; கா ; மா பா ; பா பா | ; கமா பபா | பா , நி பா மா |
| கண் ணன் ரா தை யின் | கதை யினைச் | சொ ல்லி டவே |
| ; கமா பாம மக பம கா ; | ; கா மாபநி | பா ; ; ; |
| கருத் தினைத்த.ரு.வாய் | க ண பதி | யே . . . |
| ; மபா கமா பா ; பா ; | ; மபா நிநீ | ஸ்ா ; ; க்ா |
| எண் ணும் படி நான் | எழு திட | வே . . நீ |
| க்ா , ம்ப்ம்க்ா , ஸ் க்ாஸ்ா ; | ; நீஸ்நிபா | மகபம கமகஸ |
| எப் பிழை . யும் வராமல் | கா . . த் | த . . . ருள் . . |
| கா - | | |
| . (கருணை) | | |